**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No.115/2009**

2026 –ம் ஆண்டு ஜனவரி மாதம் 23 –ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 23.01.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சேட்டு (DW–1) | வயது | : | 67/2026 |
| க/த பெயர் | : | திரு. பிச்சை | தொழில் | : | சுயதொழில் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். வாதி எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது அண்ணன் மனைவி. என்ன பரிகாரம் வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கின் விபரங்களும் அது தொடர்பான ஆவணங்களை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை.
2) செங்கம்மாள் எனது தாயார் என்றால் சரிதான். செங்கம்மாளுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் நான், ராஜமாணிக்கம், வைரக்கண்ணு, மணி, கண்ணன், பவுனம்மாள், பானுமதி ஆகியோர். எனது அப்பா எப்போது இறந்தார் என்றால் எனது அம்மா செங்கம்மாள் இறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார். எனது குடும்பத்தில் நான் எத்தனையாவது குழந்தை என்றால் கடைசி பிள்ளை.
3) எனது தாயார் செங்கம்மாளுக்கு மன்னார்குடி நகரத்தில் நிறைய சொத்துக்கள் இருந்தது என்றால் சரிதான். எங்கு எங்கெல்லாம் சொத்துக்கள் இருந்தன என்றால் செங்மங்குளம் கிராமத்தில் இருந்தது, குறிப்பிட்டு சொல்லமுடியாது. செங்கம்மாள் உயிருடன் இருக்கும்போது அவரது குழந்தைகள் அனைவரும் திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். ஆண் குழந்தைகள் அனைவரும் திருமணம் ஆகி

மன்னார்குடியில் செங்கங்குளம் கிராமத்தில் வசித்து வந்தோம் என்றால் சரிதான்.

4) வாதியின் கணவர் மணி அவரது குழந்தைகளுடன் செங்கங்குளம் கிராமத்தில் வசித்து வந்தார் என்றால் சரிதான். தாவா சொத்தில் தான் மணி குடும்பத்துடன் வசித்து வந்தார் என்றால் சரிதான். எந்த வருடம் பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் எங்கள் குடும்பத்தில் அண்ணன், தம்பிகள் கூடி பேசி 1992 இல் பாகம் பிரித்து கொண்டோம். செங்கம்மாளுக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களையும் பாகம் பிரித்து கொண்டோம் என்றால் சரிதான். பாகம் பிரித்துக் கொண்டதற்கான பாகப்பிரிவினை அசல் ஆவணம் தற்போது யாரிடம் உள்ளது என்றால் மூத்தவர் ராஜமாணிக்கத்திடம் உள்ளது. அது பி.சா.ஆ.1 ஆவணம் என்றால் சரிதான்.

5) தாவா சொத்து பாகப்பிரிவினையில் பாகம் பிரிக்கப்பட்டதா என்றால் இல்லை. பி.சா.ஆ.1 ஆவணப்படி F ஷெட்யூல் சொத்துக்கள் எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு மட்டும் குடும்ப உறுப்பினர்களில் மற்றவர்களை விட அதிகமான சொத்து ஒதுக்கப்பட்டதற்கான தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால் இல்லை. எனது சகோதரர் மணி உயிருடன் இல்லை என்றால் சரிதான். வாதியின் கணவர் உயிருடன் இருந்தபோது எனக்கும் அவருக்கும் சுமூகமான உறவு இருந்தது என்றால் சரிதான்.

6) வாதி என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் 6 மாத்திற்கு முன்பு புகார் கொடுத்தார். காலி மனையில் மண் கொட்டியதற்காக மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதன் பேரில் விசாரணை செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தில் மண் கொட்டிதற்காக வாதி புகார் கொடுத்தார் என்றால் சரிதான். எனக்கு நீதிமன்றத்தில் ஒரு தலைபட்ச உத்தரவு கிடைக்கப்பெற்றதால் மண் கொட்டினேன் என்றால் சரிதான். அந்த உத்தரவின் நகலை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன்.

7) பி.சா.ஆ.2 ஆவணமானது செங்கம்மாள் மணிக்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். பி.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள சர்வே எண், தாவா சொத்தின் சர்வே எண் வெவ்வேறானது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்திலும் தாவா சொத்தின் புல எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கு எவ்வாறு கிடைத்ததாக கட்சி செய்கிறேன் என்றால் எனது தாயார் உயில் எழுதி வைத்ததால் கிடைத்தது என கட்சி செய்கிறேன். அந்த உயில் ஆவணம் பி.சா.ஆ.3 ஆவணம் என்றால் சரிதான்.

8) பி.சா.ஆ.3 ஆவணப்படி எவ்வளவு சொத்துக்கள் எனக்கென்று ஒதுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 720 சதுரடி. பி.சா.ஆ.3 ஆவணமான உயிலை தவிர வேறு ஏதேனும் உயில் எழுதி வைத்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது அம்மா செங்கம்மாள் பவுனம்மாள் என்பவருக்கு எழுதி கொடுத்த உயில் ஆவணம் தான் பி.சா.ஆ.4 என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ.4 ஆவணம் பற்றிய விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

9) பி.சா.ஆ.4 ஆவணப்படி தாவா சொத்தில் 290 சதுரடி பவுனம்மாளுக்கு எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். உயில் மூலம் எனக்கு எழுதி கொடுத்த சொத்தும் பவுனம்மாளுக்கு எழுதி கொடுத்த சொத்தும் ஒரே இடத்தில் உள்ளதா என்றால் அடுத்தடுத்து உள்ளது. இரண்டு சொத்தும் எனது தாயாருக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். உயில் ஆவணம் ஏற்படுத்தியபோது எனது தாயார் நல்ல நிலையில் இருந்தார் என்றால் சரிதான். உயில் ஆவணம் எழுதியபோது எனது அம்மாவிற்கு எவ்வளவு வயது இருக்கும் என்றால் சுமார் 70 வயது இருக்கும்.

10) தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு பதிவு செய்யப்பட்ட ஆவணம் ஏதேனும் இந்த வழக்கில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. 2009 இல் வழக்கின் விபரம் எனக்கு தெரியவந்தது என்றால் சரிதான். எனக்கு எழுதிய உயில் ஆவணத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால்

இல்லை. உயிலின் அடிப்படையில் தாவா சொத்தை எனது அனுபவத்திற்கு மாற்றிக்கொள்ள வருவாய் ஆவணம் ஏதேனும் பெற்று இந்த வழக்கில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

11) தாவா சொத்து எனது அனுபவத்தில இருப்பதற்கான வருவாய் ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. பவுனம்மாள் என்பவர் அவரது மகளான ரேவதி என்பவருக்கு 14.03.2006 இல் செட்டில்மெண்ட் ஆவணம் பி.சா.ஆ.6 ஆவணம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். ரேவதிக்கு தாவா சொத்தை செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடத்த பின்னர் வருவாய் ஆவணத்தில் ரேவதி பெயரில் மாற்றப்பட்டதற்கான வருவாய் ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை.

12) தாவா சொத்து வாதியின் கணவர் மணியின் அனுபவத்தில் இருந்து வந்தது என்பதற்கு பட்டா வா.சா.ஆ.2 ஆவணம் வருவாய் துறையால் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிக்கு வாதியின் கணவர் தாவா சொத்தை வா.சா.ஆ.4 ஆவணமான செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் வாதியின் அனுபத்தில் இருந்து வருவதால் தான் தாவா சொத்துக்கள் குறித்த வருவாய் ஆவணங்கள் அனைத்தும் வாதியின் பெயரில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

13) தாவா சொத்து எந்த காலத்திலும் எனது அனுபவத்தில் இல்லாததால்தான் வருவாய் ஆவணங்களில் எனது பெயரில் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எனது பெயரில் உள்ள உயில் ஆவணங்கள் மோசடியானது என்பதால்தான் எந்தவித வருவாய் ஆவணமும் எனது பெயரில் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.01.23 17:29:21 +0530

District Munsif
Mannargudi.